19 OCT 2017

கருக்கம்

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – 2017–18ஆம் கல்வியாண்டு முதல் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில், புதிதாக துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு "பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என பெயர் சூட்டி – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.293

நாள் 16.10.2017
ஹேவிளம்பி, புரட்டாசி 30
திருவள்ளுவராண்டு 2048

24 2017

படிக்கப்பட்டவை:

1 அரசாணை (நிலை) எண்.199, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 24.07.2017.
2 கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.38382/க்யூ2/2017, நாள்.25.09.2017

-----

ஆணை:-

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 20.09.2017 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

> " புதிதாக துவங்கப்பட்ட சீர்காழி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயர் சூட்டப்படும்."

2. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மற்றவைகளுக்கிடையே 2017–18ஆம் கல்வியாண்டு முதல் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில், ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை (1) இளங்கலை தமிழ் (B.A. Tamil), (2) இளங்கலை ஆங்கிலம் (B.A. English), (3) இளமறிவியல் கணிதம் (B.Sc. Mathematics) English Medium, (4) இளநிலை வணிகவியல் (B.Com) English Medium மற்றும் (5) இளமறிவியல் கணினி அறிவியல், (B.Sc., Computer Science) English Medium ஆகிய 5 பாடப்பிரிவுகளுடன் துவங்குவதற்கு அனுமதியும், இக்கல்லூரிக்கு 15 ஆசிரியர் மற்றும் 17 ஆசிரியரல்லா பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும், தொடரும் செலவினத்திற்கு ரூ.92,79,000/– மற்றும் தொடராச் செலவினத்திற்கு ரூ.31,13,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும், இக்கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் கட்டுவதற்கு ரூ.7.97 கோடிக்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் புதிதாக துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தற்காலிகமாக சீனிவாச சுப்புராயா அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகம், புத்தூர், சீர்காழி என்னுமிடத்தில் இயங்கி வருகிறது என்றும் சீர்காழியில் நடைபெற்று வரும் கல்லூரி முழுமையான அரசு கல்லூரியாகும் என்றும் இக்கல்லூரிக்கு "பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என பெயர் சூட்டலாம் என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

4. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, 2017–18ஆம் கல்வியாண்டு முதல் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில், புதிதாக துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு "பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என்று பெயர் சூட்டி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6
முதல்வர், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீர்காழி (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம்.
சம்பந்தப்பட்ட மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்
சம்பந்தப்பட்ட கருவூலக் கணக்கு அலுவலர்
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18
சார்ந்த பல்கலைக்கழக துணைவேந்தர்/பதிவாளர்.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
இயக்குநர், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை – 9.
இ.கோ. / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16/10/17
பிரிவு அலுவலர்
16/10/17